**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 21/2021**

**Prosecution witness : அ.சா.10** **Date : 28.10.2025.**

| | |
|---|---|
| **Name : பாலமுருகன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1) 04.12.2019 ம் தேதி காலை 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். சம்பவயிடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் சரியாக நினைவில்லை. சம்பவயிடத்தில் சம்பவ இட சாட்சிகளாக யார் யாரை விசாரித்தேன் என்றால் நந்தகுமார், தினகரன், ராஜேந்திரன், முருகன், செல்லமுத்து ஆகியோர்களை சம்பவயிட சாட்சிகளாக விசாரணை செய்தேன்.

2) சம்பவயிடத்தில் தனிநபர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் அந்த இடத்தில் தனி நபர்கள் ஆஜரில் இல்லாததால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் சிறிது தள்ளி வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு பக்தக்தில் வேகத்தடை இருந்ததால் அந்த இடத்தில் வாகனம் வேகமாக கடக்க வாய்ப்பில்லை என்றால் அவ்வாறு சொல்ல இயலாது. சம்பவயிடத்திற்கு அருகில் வேகத்தடை உள்ளதால் வாகனங்கள் வேகமாக வர வாய்ப்பு குறைவு என்றால் சரியல்ல.

3) TVS Star city வாகனத்தை ஓட்டி வந்த ரமேஷ் என்பவருக்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளதாக விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அவர் இறந்துவிட்டபடியால் ஓட்டுநர் உரிமம் பற்றி விசாரிக்க இயலவில்லை. புகாரில் இந்த விபத்து வேகத்தடையை அடுத்து 5 அடி தூரத்தில் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்த வாகனம் வேமகாக ஓட்டி வருவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றால் சரியல்ல.

4) வாகன போக்குவரத்து அதிகமாக உள்ள பகுதி என்றால் சரிதான். வாகனங்கள் எந்த பகுதியில் மோதியதாக என் விசாரணையில் தெரிந்து கொண்டேன் என்றால் குறிப்பாக எந்த பகுதியில் மோதியது என்று என் விசாரணையில் தெரிய வரவில்லை. இரு சக்கர வாகனத்தின் மீது கனரக வாகனம் மோதும் போது கண்டிப்பாக நான்கு சக்கர வாகனத்திற்கு சேதம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. மேற்படி விபத்தினால் சேதம் இல்லால் இருக்கவும் வாய்ப்புள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளருக்கு என்று ஆய்வுக்கு அனுப்பினேன் என்றால் 05.02.2019ம் தேதி அனுப்பினேன்.

5) ஆஜர் எதிரி ஓட்டியதாக சொல்லக்கூடிய கனரக வாகனத்தில் எந்த சேதமும் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக இரு வாகனங்கள் நேருக்கு நேர் மோதும் போது கனரக வாகனத்தில் சேதம் ஏற்பட 100 சதவீதம் வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. விபத்தில் மோதக்கூடிய பகுதி, மோதிய வேகம் ஆகியவற்றை பொருத்து தான் சேதம் ஏற்படக்கூடும். இரு சக்கர வாகனம் மீது கனரக வாகனம் மோதும் போது சேதம் ஏற்படாமல் விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.

6) இரு சக்கர வாகனத்திற்கு மூன்று விதமான சேதம் இருந்ததாக தெரிந்து கொண்டேன். முன்புற விளக்கு பகுதி, பம்பர், இன்டிகேட்டர்கள்

சேதமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சேதம் ஏற்பட்டுள்ள நிலையில்  நான் சொன்னவாறு வாகனத்திற்கு சேதம் ஏற்படாமல் போகவும் வாய்ப்புள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. இந்த விபத்தானது விபத்தில் இறந்து போன ரமேஷ் என்பவர் ஓட்டி வந்த வாகனமும், மற்றொரு இரு சக்கர வாகனமும் மோதியதில் நிலைதடுமாறி இந்த விபத்தில் இறந்த ரமேஷ் ஆஜர் எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் பின்புற சக்கரத்தில் விழுந்து இறந்துவிட்டார் அதனை சரிவர விசாரிக்காமல் எதிரி மீது தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7) நேருக்கு நேர் மோதியிருந்தால் கண்டிப்பாக சேதம் ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு ஆஜர் எதிரி கவனக்குறைவும், அஜாக்கிரதையும் காரணமல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**